விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–11.10 a.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –11.30 a.m.

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.I, Mettur

**Case No : CC. 116/2025**

**Prosecution side witness : அ.சா.1** **Date : 23.04.2025**

| | |
|---|---|
| Name : குமார் | Taluk மேட்டூர் |
| Father Name : பழனிசாமி | Calling : கூலி |
| Village : கொளத்தூர் | Age : 48 |

(All accused present. )

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கொளத்தூர் மாங்காட்டில் குடியிருக்கிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் பாரதிராஜா மற்றும் பிரியா ஆகிய இருவரையும் மட்டும் தெரியும். மற்ற எதிரிகளை தெரியாது. போலீசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கினார்கள். அதில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். (புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

என் சித்தப்பா பெயர் கோவிந்தசாமி என்றால் சரிதான்.

கோவிந்தசாமிக்கு 7 சென்ட் நிலம் இருந்தது அதை அவரது மகன் பாரதிராஜா பெயரில் எழுதி வைத்திருந்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கோவிந்தசாமியின் மனைவி பாப்பாத்தி கேன்சர் நோயால் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அருடைய இறப்பிற்கு பிறகு கோவிந்தசாமியின் மகன் மற்றும் அவரது மனைவி இருவரும் கோவிந்தசாமியை சரிவர பாராமரிப்பு செய்யாததால் என்னுடன் தான் இருந்தார் என்றால் இல்லை.

2) அவர் வீட்டில் இல்லாததால் பாரதிராஜா மற்றும் ஜெயபிரியா இருவரும் கோவிந்தசாமி வீட்டில் வைத்திருந்த 3 பவுன் நகை, வீட்டு பத்திரம், TVS XL வாகனத்தின் RC Book, ரேசன் கார்டு, வாகனத்தின் சாவி, மொபைல் போன் மற்றம் ரூ.1,50,000/- பணம் ஆகியவற்றை இருவரும் எடுத்துக்கொண்டு கோவிந்தசாமியை வீட்டிற்கு வராதப்படி என் புகார் மற்றும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தனது உயிருக்கு பாதுகாப்பு இல்லை என்றும் தனக்கு எதாவது நடந்தால் மகனும், மருமகளும் தான் பொறுப்பு என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

3) கடந்த 06.05.2024 ம் தேதி கோவிந்தசாமி கொளத்தூர் காவல் நிலையத்தில் மகன் மற்றும் மருமகள் மீது தன்னுடைய சொத்தை கேட்டு தொந்தரவு செய்து தொடர்பாக புகார் கொடுத்து மனு ரசீது பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 11.05.2024 ம் தேதி மதியம் 01.00 மணியளவில் திருப்பூர் மாற்றம் அறக்கட்டளை நிறுவனத்தை சேர்ந்த ஆனந்தன், சிவகுரு, அப்சர் ஆகியோர்கள் TN 33 AZ 6364 பதிவு எண்கொண்ட இனேவா காரில் வந்தபோது எதிரிகள் பாரதிராஜா,

ஜெயபிரியா இருவரும் கோவிந்தசாமியை அடையாளம் காட்டி அவர்கள் பேங்கில் இருந்து வந்திருப்பதாகவும் கோவிந்தசாமியை அவர்களுடன் போகச் சொன்னபோது அவர் மறுத்தார் என்றும் அவரை கடத்தி செல்வதற்காக எதிரிகள் 1ம் முதல் 5ம் வரை உள்ள எதிரிகள் பலவந்தமாக கடத்தி சென்றார்கள் என்றும் அதை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல.

4) 1ம் முதல் 5 வரையிலான எதிரிகள் அனைவரும் கோவிந்தசாமியை கையால் அடித்து பலவந்தமாக இழுத்து சென்று அவர்கள் கொண்டுவந்திருந்த இனேவா காரில் ஏற்றியதகாவும் மேலும் 1ம் முதல் 5 எதிரிகள் கோவிந்தசாமியை காரில் ஏற்றி அடைத்து வைத்து கடத்தி சென்றார்கள் என்றும் அவ்வாறு எதிரிகள் கடத்தி சென்றபோது கோவிந்தசாமி தன்னை காப்பாற்றும்படி சத்தம் போட்டதால் அங்கிருந்த என்னுடைய உறவினர்கள் அந்த காரை தடுத்த போது எதிரிகள் ஆனந்தன், சிவகுரு, அப்சர் ஆகியோர்கள் அவர்கள் வந்த காரை வேகமாகஓட்டி வந்து என் மீது மற்றும் அங்கிருந்த சாட்சிகள் மீது மோதுவது போல் சென்றார்கள் என்றும் மற்ற எதிரிகளான பாரதிராஜா மற்றும் ஜெயபிரியா இருவரும் யார் தடுத்தாலும் அவர்கள் மீது மோதி கொன்றுவிடுங்கள் என்றும் எவ்வளவு செலவு ஆனாலும் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று எனக்கு என்கூட இருந்தவர்கள் மீது கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் அதை நான் நேரில் பார்த்தும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

5) மற்றொரு எதிரியான 6ம் எதிரி என்பவர் இந்த செயலை திட்டமிட்டு நடத்த எதிரிகளின் குழுவை ஒருங்கிணைத்து கோவிந்தசாமியை கடந்தி

வர எதிரி பாரதிராஜா என்பவரின் வங்கி கணக்கிலிருந்து தனது வங்கி கணக்கு ரூ.35,000/- பெற்று வந்தும் 6ம் எதிரி வங்கி கணக்கிலிருந்து கோவிந்தசாமியை ஆள்கடத்தல் செய்வதற்காக எதிரி ஆனந்தன் என்பவர் வங்கி கணக்கு ரூ.17,000/- முன் பணம் அனுப்பியுள்ளது பற்றி தெரியுமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் பாரதிராஜா மற்றும் ஜெயபிரியா என்னுடைய உறவினர்கள் என்றால் சரிதான். அவர்களை காப்பாற்றுவதற்காக நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளுடன் சமரசமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அதனால் எதிரிகளுக்கு பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**- இல்லை.

**<u>விசாரணை முடிக்கப்பட்டது</u>**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**<br>
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**<br>
**மேட்டூர்.**